இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

கல்விப்பீடம்

முன்பள்ளிக்கல்வி உயர்சான்றிதழ் நிகழ்ச்சித்திட்டம் - 2021/2022

இறுதிப் பரீட்சை

**EPC2421 / EPA2421 / ESC2221** – முன்பள்ளிப் பருவத்தில் பொருத்தப்பாட்டு பிரச்சினைகள்

காலம்: மூன்று (03) மணித்தியாலங்கள்

திகதி:- 01.07.2023 நேரம்: பி.ப. 01.30 - பி.ப 04.30

- பகுதி ஒன்றிலுள்ள சகல வினாக்களுக்கும் பகுதி இரண்டிலுள்ள வினாக்களுள் யாதேனும் மூன்று வினாக்களுக்கும் விடை தருக.

பகுதி - I

1. "பொருத்தப்பாட்டு பிரச்சினைகள்" எனும் பதத்தை வரையறுக்குக.
2. பிள்ளைகளின் பொருத்தப்பாட்டுப் பிரச்சினைகளில் செல்வாக்குச் செலுத்தும் **இரண்டு** (02) காரணிகளைச் சுருக்கமாக விபரிக்குக.
3. எரிக்சனினால் முன்மொழியப்பட்ட விருத்தியின் முதல் **மூன்று** (03) நிலைகளைப் பெயரிடுக
4. ஆரம்ப ஆண்டுகளில் பிணைப்பு (Bonding in the Early Year) எனும் பதத்தினால் கருதப்படுவது யாது? விளக்குக.
5. நல்ல பெற்றோரியல் (Good Parenting) பண்புகள் **மூன்றினை** (03) குறிப்பிடுக.
6. முன்பள்ளி பிள்ளைகளிடத்தில் பொதுவாகக் காணப்படும் பொருத்தப்பாட்டு பிரச்சினைகள் ஐந்தினை (05) பட்டியற்படுத்துக.
7. இளம் பிள்ளைகளின் மனவெழுச்சி விருத்தியில் வெகுமதிகளையும், தண்டனைகளையும் எவ்வாறு பயன்படுத்தலாம் என்பதை **இரண்டு** (02) நிகழ்வுகள் மூலம் விளக்குக.
8. "பாடசாலை பயம் (School Phobia) எனும் பதத்தால் குறிப்பிடுவது யாது? சுருக்கமாக விபரிக்குக.

**(5 X 8= 40** புள்ளிகள்)

பகுதி - II

9.

**i.** பிராய்டினுடைய உளப்பகுப்பாய்வு கொள்கையின் முக்கிய எண்ணக்கருக்களை விபரிக்குக.

(10 புள்ளிகள்)

**ii.** முன்பள்ளி பிள்ளைகள் நடத்தையில் காணப்படும் பிரச்சினையை அடையாளம் காண்பதற்கும் விளக்குவதற்கும் பிரய்டினுடைய கோட்பாட்டை எவ்வாறு பயன்படுத்துவீர்கள் என்பதை விளக்குக.

(10 புள்ளிகள்)

10.

i. வாழ்க்கையின் ஆரம்ப காலகட்டத்தில் பெற்றோரை விட்டுப் பிரிந்த பிள்ளைகள் எச்சூழ்நிலையில் நன்கு பொருத்தப்பாடுடைய இளைஞர்களாக மாற்றமடையலாம் என்பதை பற்றி கலந்துரையாடுக.

(10 புள்ளிகள்)

ii. பிள்ளையின் ஆக்ரோஷமான நடத்தைக்கு பங்களிப்பு செய்யும் காரணிகளை விபரிக்குக.

(10 புள்ளிகள்)

11.

i. நடத்தைக் கோட்பாட்டின் முக்கிய பண்புகளைக் குறிப்பிடுக.

(06 புள்ளிகள்)

ii. முன்பிள்ளை பருவத்தினருடையே விளையாட்டின் அனுகூலங்களை விபரிக்குக.

(06 புள்ளிகள்)

iii. பிள்ளையொன்றின் மனவெழுச்சி பிரச்சினைகளை அகற்றுவதற்கு விளையாட்டை ஒரு கோட்பாடாக எவ்வாறு பயன்படுத்தலாம் என்பதை விபரிக்குக.

(08 புள்ளிகள்)

12.

i. பொருத்தப்பாட்டு பிரச்சினையுடைய பிள்ளைகளை சகபாடிகளுடன் வழிநடத்தி செல்வதற்கு ஆசிரியர் என்ற வகையில் எவ்வாறு ஆதரவளிப்பீர்கள் என்பதனை உதாரணங்கள் மூலம் விளக்குக.

(10 புள்ளிகள்)

ii. பொருத்தப்பாட்டு பிரச்சினையுடைய பிள்ளைகளிற்கு ஆதரவளிப்பதற்கு ஆசிரியர், பெற்றோர் மற்றும் பராமரிப்பாளர்கள் எவ்வாறு பங்களிப்பு செய்யமுடியும் என்பதனை விளக்குக.

(10 புள்ளிகள்)

13.

i. "வீட்டுப்பராமரிப்பு எப்பொழுதும் பிள்ளையின் வளர்ச்சியின் நேர்மறையான தாக்கத்தை ஏற்படுத்துகிறது." இக்கூற்றை ஏற்றுக்கொள்கிறீரா? உமது பதிலுக்கான காரணங்களைத் தருக.

(10 புள்ளிகள்)

ii. நிறுவன பராமரிப்பு தேவைப்படும் பிள்ளைகளின் **நான்கு** (04) வகைகளை உதாரணங்களுடன் விபரிக்குக.

(10 புள்ளிகள்)

- *முழுப்பதிப்புரிமை பெற்றது* -